## பேச்சு பிரிவு - 3

# சுவாமி விபுலாநந்தரின் சமூகப் பணிகள்

கிழக்கிலங்கையில் கிழக்கே வங்கக்கடலும், மேற்கே வளம்கொளிக்கும் மருத நிலமும் இயற்கை அரணாக அமையப்பெற்றதே காரைதீவாகும். இத்தமிழ் மண் எமக்குத் தந்த பெருநிதியம் சுவாமி விபுலாநந்தர் ஆவார்.

சுவாமி விபுலாநந்தரின் சமூகம் சார்ந்த தெளிவான சிந்தனையும், அர்ப்பணிப்பும், ஆர்வமும், அவர் மேற்கொண்ட பணிகளும் எம்மை மலைக்கவைக்கின்றன. அவரது சமூகம் பற்றிய சிந்தனையானது மகத்தானது. சாதி, மத, வருண பேதங்கள் இல்லாத பிரிவினையற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவதாக இருந்தது. இதனை அடைவதற்காக தனது வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்தார்.

சுவாமியின் சமூகப்பணிகளில் முக்கியமானது கல்விப்பணியாகும். ஏழை மாணவர்களுக்கு கல்வி வழங்குவதற்காக இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் பல புதிய பாடசாலைகளை அமைத்தார். இதற்கு மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தை உதாரணமாகக் கொள்ளலாம். பேற்றோரை இழந்த சிறுவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்காக மாணவர் விடுதிகளையும் நிறுவினார்.

மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் போது திருவேட்களத்தில் வாழ்ந்த மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்தார். சேரிப்புறத்தில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட சிறுவர்களுக்கு பாலர் பாடசாலையும், வளந்தோருக்கு இரவுப் பாடசாலையும் அமைத்து கல்வியறிவு ஊட்டினார். அவர்களைத் தனது இல்லத்துக்கு அழைத்து உணவும் வழங்கினார். மேலும் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆசிரியராப் பணியாற்றும் போது மீனவர் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பரந்த நோக்குடன் பல சமூகப் பணிகளை ஆற்றிய சுவாமி விபுலாநந்தரை நாமும் பின் பற்றுவோம் வாரீர்.

நன்றி, வணக்கம்.